ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2048/31 - 2017 දෙසැම්බර් මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.12.07

*2048/31 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல் நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்***

*3 (4) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 (4) ஆம் பிரிவின் நியதிகளின்படி எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வியாபாரம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரான மலிக் சமரவிக்ரம ஆகிய நான், இவ்வறிவித்தலின் மூலம்-*

*(1) எழுநூற்றித்தொண்ணூற்றி நான்கு மில்லியன் ஐக்கிய அமெரிக்க நாடுகள் டொலரான (ஐஅநாடொ 794 மில்லியன்) எதிர்நோக்கப்பட்ட முதலீடொன்றுடன் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை (துறைமுகம்) மீளக்கட்டமைத்து, அபிவிருத்தி செய்து, வர்த்தக ரீதியில் ஒப்பேறக்கூடிய தேசியச் சொத்தாக ("கருத்திட்டம்") உருமாற்றுவதற்கான கருத்திட்டத்தை அடையாளங்காண்கின்றேன். அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் எல்லாத் தொழிற்பாடுசார் சொத்துக்களினதும் முகாமைத்துவத்தைப் பொறுப்பேற்பதற்கும் அதன்மூலம் கப்பற் சரக்குக் கையாளுகையையும் தொடர்புபட்ட தொழிற்பாடுகளையும் ("கருத்திட்டச் செயற்பாடு") மேலும் அபிவிருத்தி செய்து வர்த்தக மயமாக்குவதற்கும் கருத்திட்டமானது அர்ப்பணிப்புக் கொண்டுள்ளது. அத்துடன் இது, 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(2) ஆம் பிரிவின்படி 2017, நவம்பர் 6 ஆந் திகதிய 2044/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது;*

*(2) மேற்கூறப்பட்ட சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி எழுநூற்றித்தொண்ணூற்றி நான்கு மில்லியன் ஐக்கிய அமெரிக்க நாடுகள் டொலரான (ஐஅநாடொ 794 மில்லியன்) எதிர்நோக்கப்பட்ட முதலீடொன்றுடன் அம்பாந்தோட்டைத் துறைமுக (துறைமுகம்) அபிவிருத்தியை மீளக்கட்டமைப்பதற்கும் வர்த்தக ரீதியில் ஒப்பேறக்கூடிய தேசியச் சொத்தாக ("கருத்திட்டம்") உருமாற்றுவதற்கும் அதனைச் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக வெளிப்படுத்துவதற்கும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதெனக் கூறுகின்றேன்;*

*(3) மேலேயுள்ள செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம்,அம்பாந்தோட்டைத் துறைமுக (துறைமுகம்) அபிவிருத்தியை மீளக்கட்டமைப்பதற்கும் அதனை வர்த்தக ரீதியில் ஒப்பேறக்கூடிய தேசியச் சொத்தாகவிருப்பதற்கு உருமாற்றுவதற்குமான கருத்திட்டமென அழைக்கப்பட்டு அறியப்படுதல் வேண்டுமென்றும் இக்கருத்திட்டத்தைப் பொறுப்பேற்பதற்கான கருத்திட்டக் கம்பெனி M/Sஅம்பாந்தோட்டை இன்டர்நஷனல் போர்ட் குறூப் (பிறைவேட்) லிமிற்றெற் (கருத்திட்டக் "கம்பெனி") என்பதாகவுள்ளதென்றும் குறித்துரைக்கின்றேன்;*

1A - G 26739 — 457 (2017/12)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*(4)* *கருத்திட்டக் கம்பெனியானது, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 (5) ஆம் பிரிவின் நியதிகளின்படி பாராளுமன்றத் தீர்மானத்தின் மூலமான அங்கீகாரத்தின் மேல் ஏழு (7) ஆண்டுகளினுள் வர்த்தகத் தொழிற்பாடுகளை அமுலாக்குதலும் தொடங்குதலும் வேண்டுமெனக் குறித்துரைக்கின்றேன்;*

*(5)* *மேற்கூறப்பட்ட கருத்திட்டத்தின் நோக்கங்களுக்காக, திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் நியதிகளின்படி, இவ்வறிவித்தலில் தரப்பட்டுள்ள விலக்களிப்புகள் கருத்திட்டக் கம்பெனிக்கு ஏற்புடையனவாதல் வேண்டுமெனக் குறித்துரைக்கின்றேன்.*

***அட்டவணை***

***(1) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்***

(i) ***கூட்டிணைப்பு வருமான வரி***

*சொல்லப்பட்ட கருத்திட்டத்திலிருந்தான செயற்பாடுகளிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட இலாபம்,ஈட்டுகை மற்றும் வருமானத்தின்மீது கருத்திட்டக் கம்பெனியின்மீது வருமானவரி விதித்தல் தொடர்பாக 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள், இருபத்தைந்து (25) ஆண்டுக்காலப்பகுதிக்கு ("வரிவிலக்களிப்புக் காலப்பகுதி") ஏற்புடையனவாதலாகாது.*

*சொல்லக்கட்ட வரிவிலக்களிப்புக் காலப்பகுதி, இலங்கைத் துறைமுக அதிகாரசபை (இதுஅ), இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு (இஅ) சைனா மேர்ச்சன்ட்ஸ் போர்ட் ஹோல்டிங்க்ஸ் கம்பெனி லிமிற்றெற் (சீஎம்போர்ட்) அம்பாந்தோட்டை இன்டர்நஷனல் போர்ட் சேர்விசஸ் கம்பெனி (பிறைவேட்) லிமிற்றெற் (எச்ஐபீஎஸ்) என்பவற்றுக்கும் கருத்திட்டக் கம்பெனிக்கும் இடையே (சலுகை உடன்படிக்கை) செய்து கொள்ளப்பட்ட அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கான, 2017, யூலை 29 ஆந்திகதிய சலுகை உடன்படிக்கையின் பயனுறு திகதியிலிருந்து ஏழு (07) ஆண்டுகளுக்குப் பின்னர் தொடங்குதல் வேண்டும்.*

*ஆயின், மேற்கூறப்பட்ட வரிவிலக்களிப்புக் காலப்பகுதி முடிவுற்றபின்னர் கருத்திட்டக் கம்பெனியின் இலாபங்கள்,ஈட்டுகைகள் மற்றும் வருமானம் தொடர்பிலான வருமானவரி, அப்போதைக்கு வலுவிலுள்ள உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.*

*ஆயின், எவ்வாறாயினும், கருத்திட்டக் கம்பெனியின் அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டத்துக்கு முதலீட்டாளர் பிரவேசிப்பதற்காக இடம்பெறுகின்ற ஒப்புரவுக் கொடுக்கல்வாங்கல் அல்லது சொத்துக் கைமாற்றம் கூட்டிணைப்பு வருமானவரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.*

*எவ்வாறாயினும், பொருளாதாரச் சேவை விதிப்பனவு (பொசேவி), மேற்படி வரிவிலக்களிப்புக் காலப்பகுதியின் போது கருத்திட்டத்தின் முழுமொத்தத் தொழிற்பாட்டு அரசிறையின் 0.05% என்ற வீதத்தில் ஏற்புடையற்பாலதாகும்.*

(ii) ***பங்கிலாபங்கள் மீதான வரி***

*விலக்களிக்கப்பட்ட இலாபத்திலிருந்து பங்குதாரர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட பங்கிலாபங்கள், இருபத்தைந்து (25) ஆண்டுகளைக் கொண்டசொல்லப்பட்ட வரி விலக்களிப்புக் காலப்பகுதியின் போதும் சலுகை உடன்படிக்கையின் பயனுறு திகதியிலிருந்து தொடங்குகின்ற அதன்பின்னரான ஓர் (01) ஆண்டின்போதும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.*

(iii) ***பிடித்துவைத்தல் வரி***

*கருத்திட்டக் கம்பெனி, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(5) ஆம் பிரிவின் நியதிகளின் படி பாராளுமன்றத் தீர்மானத்தின்மூலமான அங்கீகாரத்தின்மேல் தொடங்குகின்ற ஏழாண்டுக் காலப்பகுதிக்கு (7) பின்வருவனவற்றின்மீது பிடித்துவைத்தல் வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்:*

*(அ) முகாமைத்துவக் கட்டணங்களின் மீதும் அரசுரிமைப்பணக் கொடுப்பனவுகளின் மீதும்; ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய விதிப்பனவுகளின் மொத்தம், முழுமொத்தத் தொழிற்பாட்டு அரசிறையின் மூன்று சதவீதத்தை (3%) விஞ்சுதலாகாது;*

(ஆ) சந்தைப்படுத்தற் கட்டணங்களின்மீது; ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய கட்டணங்களின் மொத்தம், முழுமொத்தத் தொழிற்பாட்டு அரசிறையின் ஒன்று தசம் ஐந்து சதவீதத்தை (1.5%) விஞ்சுதலாகாது; அத்துடன்

(இ) ஊக்குவிப்பு முகாமைத்துவக் கட்டணங்களின்மீது; ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய கட்டணங்களின் மொத்தம்,முழுமொத்தத் தொழிற்பாட்டு இலாபத்தின் மூன்று சதவீதத்தை (3%) விஞ்சுதலாகாது.

எவ்வாறாயினும், கருத்திட்டக் கம்பெனி, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(5) ஆம் பிரிவின் நியதிகளின் படி பாராளுமன்றத் தீர்மானத்தின் மூலமான அங்கீகாரத்தின்மேல் தொடங்குகின்ற இருபத்தைந்து (25) ஆண்டுக்காலப்பகுதிக்கு மூலதனச் செலவினத்துக்காக எடுக்கப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டியின் மீதும் ஆலோசகர்களுக்குச் செலுத்தப்பட்ட தொழினுட்பக் கட்டணங்கள் அல்லது சேவைக் கட்டணங்களின்மீதும் பிடித்துவைத்தல் வரியைச் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(iv) **உழைக்கும் போது செலுத்தும் வரி**

கருத்திட்டக் கம்பெனியின் வெளிநாட்டுப் பணியாட்டொகுதியினர், செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(5) ஆம் பிரிவின் நியதிகளின் படி பாராளுமன்றத் தீர்மானத்தின் மூலமான அங்கீகாரத்தின் மேல் தொடங்குகின்றதும் கொடுக்கப்பட்ட ஏதேனும் நேரத்தில் அதிகபட்ச எண்ணிக்கையினராக இருபத்தேழு (27) ஊழியர்களுக்கமைந்ததுமான ஏழாண்டுக் காலப்பகுதிக்கு (7) ஏற்புடையற்பாலதாகஉழைக்கும்போது செலுத்தும் வரியின் (PAYE) கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

*(2)* ***2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதிவரி (VAT)சட்டம்***

இலங்கை முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறு கருத்திட்டத்தை அமுலாக்குவதற்காகத் தேவைப்படுத்தப்பட்ட கருத்திட்டம் தொடர்பான பண்டங்களின் எல்லா இறக்குமதிகளும் கருத்திட்டம் தொடர்பான பண்டங்களின் அல்லது சேவைகளின் உள்நாட்டுக் கொள்வனவுகளும், செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(5) ஆம் பிரிவின் நியதிகளின் படி பாராளுமன்றத் தீர்மானத்தின்மூலமான அங்கீகாரத்தின்மேல் தொடங்குகின்ற ஏழு (07) ஆண்டுக் காலப்பகுதிக்குச் சேர்பெறுமதிவரிக் கொடுப்பனவிலிருந்து (VAT) விலக்களிக்கப்படுதல் வேண்டும். உள்நாட்டுக் கொள்வனவுகளும் இறக்குமதிகளும் தொடர்பான விலக்களிப்பு, கருத்திட்டத்தின் நோக்கங்களுக்காகக் கருத்திட்டக் கம்பெனியின் ஒப்பந்தகாரருக்கு அல்லது கீழொப்பந்தகாரருக்கு ஏற்புடையற்பாலதாதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், கருத்திட்டக் கம்பெனியின் அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டத்துக்கு முதலீட்டாளர் பிரவேசிப்பதற்காக இடம்பெறுகின்ற ஒப்புரவுக் கொடுக்கல் வாங்கல் அல்லது சொத்துக் கைமாற்றம் நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

*(3)* ***2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டு (PAL)சட்டம்***

கருத்திட்டக் கம்பெனி, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(5) ஆம் பிரிவின் நியதிகளின் படி பாராளுமன்றத் தீர்மானத்தின் மூலமான அங்கீகாரத்தின்மேல் தொடங்குகின்ற ஏழு (7) ஆண்டுகளின்போது இறக்குமதி செய்யப்பட்டனவும் இலங்கை முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டனவுமான கருத்திட்டம் தொடர்பான பண்டங்களின்மீது, துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டின் (PAL) கொடுப்பனவிலிருந்தும் விதிப்பனவிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும். இவ்விலக்களிப்பானது கீழே (08) ஆம் இலக்க விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, கருத்திட்டத்துக்காகக் கருத்திட்டக் கம்பெனியினாலான நேரடி இறக்குமதிகளின்மீது அல்லது கருத்திட்டத்தின் நோக்கங்களுக்காக ஓர் ஒப்பந்தகாரரினாலான அல்லது கீழொப்பந்தகாரரினாலான இறக்குமதிகளின்மீது ஏற்புடையற்பாலதாதல் வேண்டும்.

*(4)* ***1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித்தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்***

இலங்கை முதலீட்டுச்சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறு, பிரயாணத்துக்குப் பயன்படுத்தப்படும் வாகனங்கள் தவிர, கருத்திட்டம் தொடர்பான இனங்களின் இறக்குமதி, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(5) ஆம் பிரிவின்

நியதிகளின் படி பாராளுமன்றத் தீர்மானத்தின்மூலமான அங்கீகாரத்தின்மேல் ஏழு (7) ஆண்டுகளின்போது உற்பத்தித்தீர்வைக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும். இவ்விலக்களிப்பானது, கருத்திட்டத்தின் நோக்கங்களுக்காகக் கருத்திட்டக் கம்பெனியின் ஒப்பந்தக்காரருக்கு அல்லது கீழொப்பந்தகாரருக்கு ஏற்புடையற்பாலதாதல் வேண்டும்.

(5) **1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்**

இலங்கை முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறு கருத்திட்டம் தொடர்பான இனங்களின் இறக்குமதி, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(5) ஆம் பிரிவின் நியதிகளின் படி பாராளுமன்றத் தீர்மானத்தின் மூலமான அங்கீகாரத்தின் மேல் தொடங்குகின்ற ஏழு (7) ஆண்டுகளின்போது ஆயவரிக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும். இவ்விலக்களிப்பானது, கருத்திட்டத்தின் நோக்கங்களுக்காகக் கருத்திட்டக் கம்பெனியின் ஒப்பந்தக்காரருக்கு அல்லது கீழொப்பந்தகாரருக்கு ஏற்புடையற்பாலதாதல் வேண்டும்.

(6) **நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (NBT) சட்டம்**

கருத்திட்டக் கம்பெனியும், ஒப்பந்தக்காரரும் கீழொப்பந்தக்காரர்களும் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(5) ஆம் பிரிவின் நியதிகளின் படி பாராளுமன்றத் தீர்மானத்தின் மூலமான அங்கீகாரத்தின் மேல் தொடங்குகின்ற ஏழு (7) ஆண்டுகளின் போது நாட்டைக் கட்டியெழுப்புதல் வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், கருத்திட்டக் கம்பெனியின் அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டத்துக்கு முதலீட்டாளர் பிரவேசிப்பதற்காக இடம்பெறுகின்ற ஒப்புரவுக் கொடுக்கல்வாங்கல் அல்லது சொத்துக் கைமாற்றம் நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(7) **கருத்திட்டம் தொடர்பான இனங்களின் இறக்குமதிமீதான சுங்கத்தீர்வை [சுங்கக் கட்டளைச்சட்டம்-அத்தியாயம் 235]**

பிரயாணத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள்தவிர, கருத்திட்டம் தொடர்பான இனங்களின் எல்லா இறக்குமதிகளும், செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(5) ஆம் பிரிவின் நியதிகளின் படி பாராளுமன்றத் தீர்மானத்தின் மூலமான அங்கீகாரத்தின் மேல் தொடங்குகின்ற ஏழாண்டுகளின் போது (7) கருத்திட்டத்தின் நோக்கத்துக்காக, இலங்கை முதலீட்டுச்சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறு சுங்கத்தீர்வையிலிருந்து விலக்களிக்கப்படும். சுங்கத்தீர்வையிலிருந்து விலக்களித்தலானது,பாராளுமன்றத் தீர்மானத்தின்மூலமான அங்கீகாரத்தின்மேல் தொடங்குகின்ற ஏழாண்டுகளின்போது (7) இலங்கை முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறு கருத்திட்டக் கம்பெனியினால் நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டதாயினுஞ்சரி, அல்லது ஒப்பந்தகாரர்களினூடாக அல்லது கீழொப்பந்தகாரர்களினூடாக வளமளிக்கப்படினுஞ்சரி,கருத்திட்டத்துக்காகத் தேவைப்பட்ட கருத்திட்டம் தொடர்பான எல்லா இறக்குமதிகளுக்கும் ஏற்புடையற்பாலதாதல் வேண்டும். எதிர்மாறான நிரலிலுள்ள இனங்களும் சுங்கத்தீர்வையிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்; ஆயின், அத்தகைய இனங்கள் ஒன்றில் இலங்கையில் முழுமையாக உற்பத்திசெய்யப்படாதிருத்தல் வேண்டும் அல்லது கருத்திட்டத்தைப் பூர்த்திசெய்வதற்காகப் போதிய தரத்திலும், தொகையிலும், காலஎல்லைகளினுள்ளும் கிடைக்கக்கூடியனவாகவிருத்தலாகாது.

**மலிக் சமரவிக்ரம, பா.**
அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வியாபார அமைச்சர்

2017 ஆம் ஆண் திசெம்பர் மாதம் 07 ஆந் நாளாகிய இன்று.

12 - 652

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.